1st September 1959]

SRI K. VINAYAKAM : கம்யூனிடி ப்ராஜெக்ட் அட்வைசரி கமிட்டியில் அங்கம் வகிக்கும் விஷயத்தில், அந்தத் திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அங்கம் வகிப்பது தானே நல்லது ? அந்தத் திட்டம் சரியல்ல என்று தினந்தோறும் பிரசாரம் செய்பவர்கள், சட்ட சபை அங்கத்தினர்களாக இருப்பதால் அங்கே அங்கம் வகிக்க வேண்டுமென்று சொல்வது சரியா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பிரசாரத்தை கமிடியிலும் செய்யலாம் என்ற நோக்கத்துடன் அங்கே வரவேண்டுமென்று அவர்கள் கோருகிறார்களோ என்னமோ, எனக்குத் தெரியாது.

Desilting of Kalasamudram in Polur taluk

* 32 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

வட ஆற்காடு ஜில்லா, போளூர் வட்டம், காளசமுத்திரம் ஏரியிலுள்ள மண்ணை வாரும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The scheme has been dropped as it was found to be highly uneconomical.

SRI S. M. ANNAMALAI : இந்த காளசமுத்திரம் ஏரியில் ஏறத்தாழ இரண்டு மாதங்கள் தண்ணீர் வந்திருந்த போதிலும்கூட ஒரு நாளைக்கு கூட பாய்வதில்லை. இரண்டு ஆண்டுகளாக அங்கே தொடர்ந்து 'ரெமிஷன்' கொடுத்து வருகிறார்கள். ஏரியில் 12 அடிக்கு மேல் மண் அடித்து தூர்ந்து போய் இருக்கிறது. மதகு பூராவும் தூர்ந்துபோய் இருக்கிறது. அதனால் அங்கே தண்ணீர் பாய்வதில்லை. எனவே அதை மறு பரிசீலனை செய்து மண்ணை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மழையில்லாததால் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை என்றால், அப்போது ஏரி எவ்வளவு நல்ல நிலையிலிருந்தாலும் அதைத் தவிர்க்க முடியாது. இந்த ஏரியைப் பொறுத்த வரையில் இதன் மூலம் சாகுபடி செய்யப்படக்கூடிய நிலப் பரப்பு 154 ஏக்கர் 77 சென்ட். சென்ற ஐந்து வருஷங்களில் இதன் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நிலப் பரப்பு 145 ஏக்கர் 76 செண்ட். ஆகையால் சாகுபடி செய்யாமல் போனது 9 ஏக்கர் 1 செண்ட்தான். மேலும் இந்த ஏரியின் 'காச்மெண்ட் ஏரியா' மலைப் பிராந்தியத்தில் இருக்கிறது. ஆகையால் வேகமாக மண்ணை அடித்துக் கொண்டு போகிறது. மதகை சரிபடுத்த வேண்டுமானால் அதற்கு 30,000 ரூபாய் செலவாகும். அவ்வளவு செலவு செய்தாலும ஏற்படக்கூடிய பலன் கணிசமாக இருக்காது என்று தெரிகிறது. ஆகையால் இதற்கு 30,000 ரூபாய் செலவு செய்வது 'அன்இகனாமிகல்' என்பதால் இது கைவிடப்பட்டிருக்கிறது.

"Swayamariyathai" marriages

* 33 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : } Will the Hon.
SRI S. LAZAR :

the Minister for Home be pleased to state whether there is any proposal to bring in legislation to validate "Swayamariyathai" or non-religious marriages so far conducted in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. LAZAR : ஒரு சாரார் இது போன்ற கல்யாணங்களைச் செய்து வைப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தகராறுகள் வரும் போது கோர்ட்டுகளில் இவர்களுக்கு பாதகமான தீர்ப்புகள் (இக்கல்யாணங்கள் செல்லுபடியாகா என்ற தீர்ப்புகள்), வழங்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதுபோன்ற கல்யாணங்களை செய்துவைக்கக் கூடாது என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்யுமா ?

[1st September 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுயமரியாதை முறைப்படி கல்யாணங்கள் செய்து வைப்பதால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். இதன் காரணமாக இது சம்பந்தமாக ஒரு சட்டம் வேண்டுமென்று முன்பு கோரப் பட்டது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனல் பார்லிமெண்டால் இயற்றப்பட்டி ருக்கும் ஸ்பெஷல் மாரியேஜஸ் சட்டத்தின் உதவியால் இந்தச் சங்கடங்களை சமாளிக்கலாம். சுயமரியாதைக் கல்யாணம் என்பது இன்ன 'பாட்டர்ன்'-ஐச் சேர்ந்தது என்று 'டிபைன்' பண்ணுவது, இன்னின்ன செய்தால் அது கல்யாணம் ஆகும் என்று 'டிபைன்' பண்ணுவது கஷ்டம். ஏனென்றால் சுயமரியாதைக் கல்யாணங்கள் ஒரே பாட்டர்னைச் சேர்ந்தவை யாக இல்லை. மேலும், சுயமரியாதைக் கல்யாணம் என்பது இன்னது என்று அதை சட்டப்படி நிர்ணயிப்பதே சுயமரியாதைக்கு உகந்தது அல்ல. ஆனல் கல்யாணம் பண்ணிக் கொள்பவர்கள் 'ரெஜிஸ்டர்' பண்ணிக் கொள்ளலாம். 'ரெஜிஸ்டெர்' பண்ணிக் கொண்டு விட்டால் அந்தக் கல்யாணம் 'வாலிட்' ஆகிவிடும்.

SRI A. GOVINDASAMY : ஆண்டவன் பேரில் கல்யாணம் செய்து கொண்டாலும் அது செல்லாது என்று நீதிபதி தீர்ப்பளித்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியென்றல் முன்பு இந்த சபையில் கொண்டு வரப்பட்டுக் கைவிடப்பட்டிருக்கும் ஒரு மசோதாவை மறுபடியும் கொண்டு வந்து சட்டமாக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்பே சொன்னேன் சுயமரி யாதைக் கல்யாணம் என்பது இன்ன பாட்டர்னைச் சேர்ந்தது என்று நிர்ணயிப்பது கஷ்டம் என்று. அது பலவிதமாக இருக்கிறது. சிலர் மாலை மாற்றிக்கொள்ளுகிறார்கள், சிலர் மாலை மாற்றிக் கொள்வதில்லை. சிலர் மோதிரம் மாற்றிக்கொள்கிறார்கள், சிலர் மோதிரம் மாற்றிக்கொள்வ தில்லை. சில கல்யாணங்களில் விளக்கு இருக்கிறது, சில கல்யாணங்களில் விளக்கு இல்லை. இம்மாதிரி இது பல விதமாக இருக்கிறது. ஆண்டவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ரெஜிஸ்டர் செய்துகொள்ள லாம். ரெஜிஸ்டிரார் இருக்கிறார். ரெஜிஸ்ட்ராரிடம் சொல்லிவிட்டால் கல்யாணம் 'வாலிட்' ஆகிவிடும். ரெஜிஸ்டிரார் ஆண்டவனைவிட மேலான வர். (சிரிப்பு).

SRI P. S. CHINNADURAI : எந்த முறைப்படி விவாகம் செய்து கொண்டாலும் எல்லா விவாகங்களுமே ரெஜிஸ்டர் செய்து கொள்ளப்பட வேண்டும் என்று சட்டமியற்ற சர்க்கார் முன்வருமா ? தாங்களாக ரெஜிஸ் டர் செய்து கொள்வது ஒரு மாதிரி, சர்க்கார் கூறி ரெஜிஸ்டர் செய்து கொள்வது வேறொரு மாதிரி.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கல்யாணத்தில் ஏன் நிர்ப பந்தத்தைக் கொண்டுவர வேண்டும் ? ரெஜிஸ்டர் செய்து கொள்ள விரும்பு கிறவர்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம். அதற்கு வசதி இருக்கிறது.

SRI A. A. RASHEED : இதுவரையில் இந்த ராஜ்யத்தில் எத்தனை சுய மரியாதைக் கல்யாணங்கள் நடந்திருக்கின்றன என்ற தகவல் கனம் மந்திரி அவர்களிடம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி சென்ஸஸ் ஒன்றும் எடுக்கவில்லை.

Increase in the strength of the Legislative Assembly

*34 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?